# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.13 of 2017

Deposition of DW.2

Name of the Witness: **திரு.மாணிக்கம்**

Date : 20.04.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)**

5) என் அம்மா பெயரில் மாதையன் பெயரிலும் வாங்கிய கிரய பத்திரத்தின் அசல் ஆவணத்தை என் வழக்கறிஞரை கேட்டு தாக்கல் செய்கிறேன் என்று நீதிமன்றத்தில் சொல்லி இருந்தேன் என்றால் சரிதான். நான் என்னுடைய பதிலுரையிலும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய கூடிய வாய்ப்புகள் இருந்தும் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு காரணங்கள் என்ன என்றால் நான் என் வழக்கறிஞரிடம் அசல் ஆவணத்தை காட்டிய போது அதை அவர் நகல் என்று சொன்னார். அந்த அசல் ஆவணத்தை மள்ளிகல்லில் உள்ள என்னுடைய வீட்டில் என்னுடைய உடைமைகளில் சேர்த்து வைத்திருந்தேன். 02.09.2020ல் என் நண்பரின் இறுதி சடங்கிற்கு கலந்து கொள்வதற்காக நான் என் ஊருக்கு சென்றபோது பீரோ இல்லை, அதில் இருந்த உடைமைகளும் காணாமல் போய்விட்டது. தற்போது அந்த வீட்டில் மாதையன், மணிவேல் தான் குடியிருக்கிறார்கள், அவர்களிடம்தான் அசல் ஆவணம் இருக்கும்.

6) நான் 30.07.2025 ம் தேதி இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது இந்த கிரய பத்திரத்தை என் அம்மா என்னிடம் கொடுத்ததாகவும் அதனை தாக்கல் செய்வேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் இருந்த ஆவணத்தை அசல் ஆவணம் என்று நினைத்து கொண்டிருந்தேன். என் வழக்கறிஞரிடம் கேட்டபோது நகல் என்று சொன்னார். நான் காவல் துறையில் ஐடி பிரிவில் வேலை செய்திருப்பதால் ஒரு ஆவணத்தை பார்த்தால் அது அசல் ஆவணமா நகலா என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். பீரோ உடைமைகளுடன் காணாமல் போனது சம்மந்தமாக காவல் துறையில் எந்த புகாரும் கொடுக்கவில்லை, தொடர்ச்சியாக 03.09.2020 லிருந்து எனக்கு உடல் நிலை சரியில்லாததால் கொடுக்கவில்லை. நான் தொடர் சிகிச்சையில் இருந்ததற்கு மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

7) எனக்கு முதலில் கோயம்புத்தூரில் பணி செய்தேன். அங்கு நான் 4 ஆண்டுகள் பணிபுரிந்தேன். அதன் பின் தருமபுரி மாவட்ட காவல் நிலையத்தில் 7 வருடங்களாக பணிபுரிந்தேன். அதன் பின் சேலம் மாவட்ட காவல் நிலையத்தில் 2 வருடங்கள் பணிபுரிந்தேன். பின் தருமபுரிக்கு பணி மாறுதல் பெற்று மாவட்ட காவல் அலுவலகத்தில் 5 வருடங்கள் பணிபுரிந்தேன். பின் சேலம் மாவட்ட காவல் அலுவலகத்தில் 2 வருடங்களும், ஏர்காட்டில் 3 வருடங்களும் பணிபுரிந்தேன். பின் தருமபுரி மாவட்ட காவல் அலுவலகத்தில் நான் ஓய்வு பெறும் வரை

பணிபுரிந்தேன். நான் கோயம்புத்தூரில் பணிபுரிந்தபோது அங்கேயே தங்கி இருந்தேன்.

8) எனக்கு 1993ல் தருமபுரியில் பணிபுரிந்தபோது திருமணம் ஆனது. திருமணத்திற்கு பின் என் மனைவி 2000 வருடம் வரை என் மனைவி மள்ளிக்கல்லில் தான் வசித்து வந்தார். அதன் பின் என் பணி காரணமாக நான் எங்கு செல்கிறேனோ அவரும் என்னுடன் குடும்பமாக வசித்து வந்தார். நான் எந்த ஊரில் பணிபுரிந்தேனோ அங்கேயே வசித்து வந்தேன். என் அம்மா அப்பா மள்ளிகல்லில் குடியிருந்து வந்தார்கள். 24.06.2019ல் பதிலுரை தாக்கல் செய்தபோது ஏன் கிரய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை, வழக்கறிஞர் தேவைப்படும்போது தாக்கல் செய்து கொள்ளலாம் என்று சொன்னதால் நான் தாக்கல் செய்யவில்லை.

9) 12.11.2024ல் வாதி தரப்பில் அசல் கிரய பத்திரத்தை தாக்கல் செய்ய மெமோ தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு நான் தாக்கல் செய்த ஆட்சேபணையில் அந்த ஆவணம் காணாமல் போய்விட்டதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். அப்போது அந்த ஆவணம் என்னிடம் இருப்பதாக நினைத்து கொண்டேன். 2024ல் அந்த ஆவணம் என்னிடம் உள்ளதாக மேற்சொன்ன ஆட்சேபணையில் தெரிவித்திருப்பதால் 2020ல் அந்த ஆவணம் காணாமல் போய்விட்டதாக நான் சொல்லி உள்ளது பொய் என்றால் சரியல்ல. அந்த அசல் ஆவணத்தை

ஒப்படைத்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்ற அச்சத்தினால் தான் அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10) என் அம்மா எனக்கு எழுதி கொடுத்த பி.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் பத்திரம். என் அம்மா அந்த ஆவணத்தை எழுதி கொடுத்த அன்று மாலை என்னிடம் அந்த ஆவணத்தையும் கொடுத்து சுவாதினத்தையும் ஒப்படைத்தார். அந்த ஆவணத்தில் 7ம் பக்கத்தில் அதில் என் அம்மா தான் ஏற்கனவே கையெழுத்து செய்து வந்ததாகவும் தற்போது வயோதிகத்தின் காரணமாக கைநடுக்கம் காரணமாக கைரேகை செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விவரம் கைகளால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11) என் அம்மா 2004 கிரய பத்திரத்தில் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். என் அம்மா 2014ம் வருடம் பக்கவாத நோய் ஏற்பட்டது என்றால் சரிதான். அதற்காக என் அம்மாவிற்கு தருமபுரி சங்கர் மருத்துவமனையிலும் பெங்களூர் நாராயணா மருத்துவமனையிலும் சிகிச்சை அளித்தேன். என்னிடம் காட்டப்படும் மருத்துவ பில்கள் மற்றும் விடுவிப்பு சான்றிதழ் என் அம்மா பெங்களூர் நாராயணா மருத்துவமனையில் நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் என்றால் சரிதான். என் அம்மா 2013ல் பெங்களூர் நாராயணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 1–2 மாதங்களில் சரியாகிவிட்டார்கள். பின்பு என் அம்மா தருமபுரியிலும் மள்ளிகல்லிலும் வசித்து வந்தார்கள். 2018ல் மீண்டும் உடல் நிலை சரியில்லாமல் போனதால் சிகிச்சை

பெற்று வந்தார். என் அம்மா பெங்களூர் நாராயணா மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி பி.சா.ஆ.13, மருத்துவ பில்கள் பி.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) என்னிடம் காட்டப்படும் பில்கள் 2018ம் ஆண்டில் என் அம்மா உடல் நிலை பாதிக்கப்பட்டு சிவா ஆர்தோபெடிக் மருத்துவமனையில் வழங்கப்பட்ட பில்கள் என்றால் சரிதான். அந்த மருத்துவ பில்கள் பி.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் அம்மா எனக்கு சொத்தை எழுதி கொடுத்ததால் என் உடன் பிறந்த சகோதரர்களும் என் அப்பாவும் என் அம்மாவின் காலை உடைத்ததால் சிகிச்சை எடுத்து கொண்டார். என் அம்மாவை பெங்களூரில் சிகிச்சையில் சேர்த்தபோது புகார் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு என் அம்மா வேண்டாம் என்று மறுத்துவிட்டார். ஒரு குற்றம் சம்மந்தமாக யார் வேண்டுமானாலும் புகார் கொடுக்கலாம் என்றால் சரிதான்.

13) என் அம்மாவிற்கு பக்கவாதம் ஏற்பட்டதையும், கால் எலும்பு முறிவு ஏற்பட்டதையும் என்னுடைய பதிலுரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லாமல் பின்னிட்டு யோசித்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 24.09.2022ல் என் அப்பா மற்றும் என் சகோதரர்கள் பேரில் கிருஷ்ணகிரி மாவட்டம் நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் சிஎஸ்ஆர். 244/2022 வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரில் மோசடியான ஆவணம் தயார் செய்து காலி செய்ய

மறுக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரில் என் அம்மாவை அடித்து காலை உடைத்துவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் அம்மா 2019ல் இறந்துவிட்டார்.

14) நானும் என்னுடன் பிறந்த 2 சகோதரர்களும் அரசு அலுவலர்கள் என்றால் சரிதான். ஓசூர் வீட்டு வசதி வாரியத்திலிருந்து எம்.ஐ.ஜி நம்பர் 393–எனக்கும், எம்.ஐ.ஜி நம்பர் 407–மாதையனுக்கும், எம்.ஐ.ஜி நம்பர் 396–மணிவேலுக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு அலுவலகத்தில் கடன் பெற்று செலுத்தினேன்.

15) என்னிடம் காட்டப்படும் வீடு சுவாதீன போக்கிய பத்திரம் என்னால் கோவிந்தராஜ் என்பவருக்கு ஓசூரில் இருக்கும் கதவு எண். எம்.ஐ.ஜி நம்பர் 407 வீட்டிற்காக போடப்பட்டது என்றால் சரிதான். என் அண்ணன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் பணம் தேவைப்பட்டதால் என் அண்ணன் சொன்னதன் பேரில் அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டேன். அந்த ஆவணம் பி.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பணத்தை நான் என் அண்ணனிடம் நேரில் கொடுத்துவிட்டேன்.

16) 2013ம் ஆண்டு முதல் என்னுடைய சொத்தை அபகரிக்கும் நோக்கில் என் அப்பாவை சேர்த்து கொண்டு என் சகோதரர்கள் என் சொத்தின் மீது பிரச்சனை செய்ததால் அவர்களுக்கும் எனக்கும் விரோதம் ஏற்பட்டது. 2013ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்தே ஜனவரி முதல் எனக்கும் அவர்களுக்கம் விரோதம்

ஏற்பட்டது. 2013 ஜனவரி மாதத்திலிருந்தே எனக்கும் என் அண்ணன் மாதையனுக்கும் விரோதம் என்று நான் கூறியுள்ள நிலையில் 18.03.2013 அன்று என் அண்ணனுக்காக நான் எப்படி போக்கிய பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தை அவர்கள் அப்போது வெளியில் காட்டி கொள்ளவில்லை.

17) 2013 மே மாதம் 31ம் தேதி நல்ல உடல் நிலையுடன் மாதையன் பணி ஓய்வு பெற்றார் என்றால் சரியல்ல. ஒரு வருடம் முடிந்த பின் கோவிந்தராஜிடம் பணத்தை நான் வாங்கி கொடுக்கவில்லை, என் அண்ணனே பார்த்து கொண்டார். வாதிக்கும் மற்ற பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட வீட்டை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான செட்டில்மெண்ட் பத்திரமும், போக்கிய பத்திரமும் என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. சட்டப்படி கூட்டு உரிமையாளர் அவருக்கு உரிமையான சொத்தை குறித்து ஆவணம் ஏற்படுத்த முடியும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

18) பி.சா.ஆ.7 என் அம்மா எனக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் பொதுவில் பேர் பாதி என்று தான் என் அம்மா எழுதி கொடுத்துள்ளார். அவர் அனுபவித்த சொத்தை செக்குபந்தியுடன் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதுபோல என் அம்மா அனுபவித்த சொத்திற்கு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 ல் உள்ள சொத்து விவரத்தை தான் பி.சா.ஆ.8ல் நான் என் மனைவிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில்

காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.8 என் மனைவிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்திலும் செக்குபந்தி குறிப்பிட்டுள்ளேன்.

19) என் அம்மாவிற்கு பக்கவாதம் ஏற்பட்டதால் தெளிவான மனநிலை மற்றும் உடல் நிலையில் இல்லாத நேரத்தில் என் அம்மாவை ஏமாற்றி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் கைரேகை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல . நான் மோசடியாக ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணங்கள் அமலுக்கும் வரவில்லை, ரத்து செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என் அம்மா எனக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் அடிப்படையில் நான் பட்டா என் பெயரில் மாற்றம் செய்யாமல் என் மனைவி பெயரில் மாற்றிவிட்டேனா என்றால் பட்டாவிற்கு மனு செய்தேன், கிடைக்கவில்லை, பின்னர் என் மனைவி பெயரில் பட்டா மாற்றிவிட்டேன். அந்த பட்டா பெற நான் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன்.

20) என் அம்மா என் சகோதரர்களுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏதேனும் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் என் அம்மா எதுவும் எழுதி கொடுக்கவில்லை. நான்தான் நிலத்தை வாங்கியதால் என் அம்மா எனக்கு மட்டும் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார். பி.சா.ஆ.7 எழுதி கொடுப்பதற்கு முந்தைய தினம் போச்சம்பள்ளியில் உள்ள சொத்தை என் அம்மா என் பெயரில் எழுதி கொடுத்தாரா என்றால் ஆமாம், எழுதி கொடுத்தார். என் அம்மா இறப்பதற்கு முன்பு

வரை என் அம்மாவும் அப்பாவும் ஒரே வீட்டில் ஒன்றாகத்தான் இருந்தார்களா என்றால் சரிதான்.

21) 2016ம் ஆண்டு என் சகோதரர்கள் பெயரில் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒரு புகார் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை, என் அப்பா, என்னுடைய மற்ற சகோதரர்கள் புகார் கொடுத்தார்கள். சாட்சி பின்னர் தானும் புகார் கொடுத்துள்ளதாக சொல்கிறார். என் அம்மாவிற்கு உரிமையுள்ள சொத்தை என் அம்மாவின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றாலும் என் அம்மாவிடம் நான் எழுதி வாங்கி கொண்ட செட்டில்மெண்ட பத்திரம் மற்ற வாரிசுகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

22) பி.சா.ஆ.6 கிரய பத்திரத்திற்கான பணத்தை நான் கொடுத்ததாக சொல்லி உள்ள சாட்சியத்திற்கும் பி.சா.ஆ.6 கிரய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கிரய தொகைக்கும் மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . அதனால் OS.238/2023 வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும் OS.13/2017 வழக்கில் பிரதிவாதிகளுக்கு பாகம் கிடைக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் அதற்குண்டான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.